<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 380/2025</u>
<u>வழக்கு சாட்சி PW-5</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாடசாமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சமுத்திரம் | தொழில் | : | எலக்ட்ரிசியன் |
| கிராமம் | : | கடையாலுருட்டி | வயது | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 23rd, 2025.

**(1ம் எதிரி ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் கடையாலுருட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரிசியனாக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். நான் அந்த கையெழுத்தை போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து போட்டு கொடுத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும்.போலீசார் என்னை விசாரிக்கவில்லை

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 26.02.2017ம் தேதி, மாலை 05.45 மணிக்கு வெள்ளச்சாமி நாடார் மகன் ராஜா வீட்டு பக்கம் போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. பின்னர், 18.15 மணிக்கு சம்பவயிடத்தில் வைத்து சிறிய பிளாஸ்டிக் துண்டு ஒன்று, சுந்தர் என்ற எழுத்துடன் கூடிய பிளாஸ்டிக் துண்டு ஒன்று, இடது கேன்ட் பார் பெட்டி ஆங்கிள் ஒன்று ஆகியவற்றை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. அதில் நானும், தங்கப்பழம் என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.24 14:35:28 +0530